DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : நிதீஸ்குமார் | Father/Husband Name : ராஜ்குமார் |
| Age : 18 | Village : சங்கராபுரம் |
| Taluk : | Calling : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Nov 10, 2025 12:32 PM

(A1, A2 Present)

<u>முதல் விசாரணை</u> :-

1. நான் சங்கராபுரத்தில் குடியிருந்து வருகிறேன். கோவில்பட்டியில் உள்ள SSTM-கல்லூரியில் 3ம் ஆண்டு படித்து வருகிறேன்.

2. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இவ்வழக்கில் புகார் மனு அளித்த அ.சா.1 எனது அம்மா ஆவார். எப்பொழுதும் நாங்கள் வழக்கமாக விளையாடுகின்ற எங்கள் ஊரிலுள்ள STA கோவில் அருகேயுள்ள கிரிக்கெட் கிரவுண்டில் கடந்த 2018ம் ஆண்டு நவம்பர் 09ம் தேதி மாலை 05.00 மணிக்கு நான், பாண்டித்துரை மற்றும் பாலகணேஷ் ஆகிய மூவரும் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தபோது பாண்டி ஓடினார், அந்த சமயத்தில் அங்கே கிடந்த வெடி மருந்து திடீரென சத்தத்துடன் வெடித்தது. ஓடிச்சென்று பாண்டி அருகே சென்ற பாலகணேஷ் மற்றும் எனது மீதும் வெடி மருந்து வெடித்தது. அந்த வெடி விபத்துகளில் பாண்டிக்கு உடல் முழுவதும் காயம் ஏற்பட்டிருந்தது. எனக்கு முகத்திலும், முட்டியிலும் காயம் ஏற்பட்டிருந்தது. பாலகணேசுக்கு முகத்திலும், கால் கைகளிலும் காயம் ஏற்பட்டிருந்தது.

3. அந்த வெடி மருந்து எவ்வாறு நாங்கள் விளையாடிய கிரிக்கெட் மைதானத்திற்கு வந்திருந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. ஆனால் மணி என்பவர் அந்த வெடி மருந்தை மைதானத்தில் வெடி மருந்து போட்டதாக நான் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது ஊர்க்காரர்கள் மூலம் தெரிந்துகொண்டதாக எனது அப்பா, அம்மா என்னிடம் கூறினார்கள். பின்னர் காயம்பட்ட எங்களை உப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அங்கிருந்து எங்களை மேல்சிகிச்சைக்காக கோவில்பட்டி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்ய வந்தபோது நான் வாய்பேச முடியாத நிலையில் இருந்தேன். நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது எனது அப்பா, அம்மா நடந்த சம்பவத்திற்கு புகார் கொடுத்தாக தெரிந்துகொண்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -</u>

4. நாங்கள் விளையாட சென்றதாக கூறக்கூடிய இடம் ஊருக்கு ஒதுக்குப்புறமான இடம் என்றால் வீட்டிற்கு பின்பக்கம் சுமார் 50 மீட்டர் தொலைவில் இருக்கிறது, அதற்கு அங்கு வீடு கிடையாது, ஒரு குடோன் மட்டும் இருக்கிறது. அந்த இடத்தை சுற்றி இரண்டு பக்கங்களில் ஓடை மற்ற இரண்டு பக்கங்களில் காடு இருக்கிறது

என்றால் சரிதான். எங்கள் ஊரில் உள்ள சிறுவர்கள் அந்த பகுதிக்கு தான் விளையாட செல்வார்கள் என்றால் சரிதான். நாங்கள் விளையாட சென்றதாக கூறும் நாள் தீபாவளிக்கு மறுநாள் என்றால் அது ஞாபகம் இல்லை.

5. தீபாவளி தினத்தில் நாங்கள் விளையாடக்கூடிய மைதானத்தில் தான் எங்கள் ஊரில் உள்ள சிறுவர்கள் பட்டாசு போடுவார்கள் என்றால் இல்லை. வழக்கு விபத்து நடைபெற்ற தேதியில் எத்தனை நபர்கள் அந்த மைதானத்தில் விளையாண்டோம் என்றால் நாங்கள் மூன்று பேர் மட்டும் தான் விளையாண்டோம். எங்களுடன் வேறு சிறுவர்களும் விளையாண்டார்கள் என்றாலும், அதை நான் ஒப்புக்கொண்டால் வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் விளையாடவில்லை என்று கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு விபத்து நடைபெற்ற நவம்பர் 9 ஆம் தேதி தீபாவளிக்கு மறுநாள் என்றாலும், அதை ஒப்புக் கொண்டால் வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்று அதை மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல. தீபாவளி தினத்தில் மைதானத்தில் போடப்பட்ட பட்டாசுகள் வெடிக்காமல் கிடந்தது என்றாலும், என்னுடன் வந்த என்னுடைய நண்பர்கள் அந்த பட்டாசுகளை வெடிக்க வைக்க முயற்சி செய்தபோது தான் இந்த வழக்கு விபத்து நடைபெற்றது என்றாலும் சரியல்ல.

6. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Nov 10, 2025 12:46 PM

Judicial Magistrate 2, Sattur